**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் – 1, ஒசூர்**

**முன்னிலை திரு.R.நரசிம்ம மூர்த்தி LLB.,**

**2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 –ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்:50/2015**

**CNR No. TNKI06-00091-2015**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>பேரிகை காவல் நிலையம்,<br>குற்ற எண்.13/2015 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | 1) கிருஷ்ணகுமார், (எ) சின்னதம்பி, (24/2015),<br>த/பெ. லோகநாதன்,<br>க.எண்.10/11, 4வது மெயின் ரோடு,<br>9வது கிராஸ், சீனிவாச நகர்,<br>பெங்களூர்<br><br>2) வேலு (24/2015),<br>த/பெ. ராஜா,<br>க.எண்.1/27, கிட்டம்பபட்டி கிராமம்<br>மற்றும் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.<br><br>3) கோவிந்தராஜ் (எ) மத்தன் (23/2015),<br>த/பெ. கணேஷ்,<br>கிட்டம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம்.<br><br>4) அரவிந்தகுமார், (23/2015),<br>த/பெ. சாம்ராஜ், |

| | |
|---|---|
| | க.எண்.1/162, கிட்டம்பட்டி கிராமம்,<br>மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம்<br><br>5) சரவணன் (எ) பாய் (23/2015),<br>த/பெ. மாதேஷ்,<br>கிட்டம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம்<br><br>6) பிரசாந்த், (23/2015),<br>த/பெ. சீனிவாசன்,<br>க.எண்.2/182, கிட்டம்பட்டி கிராமம்<br>மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம்.<br><br>7) ராஜா (எ) ராக்கெட் ராஜா,<br>(23/2015),<br>த/பெ. ரவி,<br>க.எண்.1/43, கிட்டம்பட்டி கிராமம்<br>மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம்.<br><br>8) குமார், (24/2015),<br>த/பெ. கோவிந்தசாமி,<br>க.எண்.1/155, கிட்டம்பட்டி கிராமம்<br>மற்றும் அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம். |
| குற்றப்பிரிவுகள் | இ.த.ச பிரிவு 379 |
| குற்றம் வனையப்பட்டது | இ.த.ச பிரிவு 379 |
| **வழக்கின் சுருக்கம்** | |

| | |
|---|---|
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | A2 to A8 – 27.01.2015 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 13.04.2015 |
| குவிமுச பிரிவுகள் 240, 246, 252 ன் பிரகாரம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 20.11.2015 |
| பல்வகை மனு அதன் முடிவு | |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | 1) அ.சா.1 மு.வி. 08.08.2023<br>குவி. 04.02.2025<br>2) அ.சா.2 மு.வி. 12.02.2026<br>கு.வி. 12.02.2026<br>3) அ.சா.3 மு.வி. 12.02.2026<br>கு.வி. 12.02.2026<br>4) அ.சா.4 மு.வி. 12.02.2026<br>கு.வி. 12.02.2026<br>5) அ.சா.5 மு.வி. 17.02.2026<br>கு.வி. 17.02.2026<br>6) அ.சா.6 மு.வி. 17.02.2026<br>கு.வி. 17.02.2026<br>ம.வி. 10.03.2026 |
| கு.வி.மு.ச. பிரிவு 313–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 24.02.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம். மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம், | – |
| மேல்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால | – |

| | |
|---|---|
| தடை மற்றும் அதன் முடிவு விபரம் | |
| தீர்மானம் மற்றும் முடிவு | 1. முடிவில், முடிவில் திரண்ட பயனிலிருந்தும் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரிகளை குவிமுச பிரிவு 248 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் உள்ள வழக்கு சொத்து எண். 13/2015 ல் உள்ள '165 எண்ணிக்கைகள் கொண்ட சென்டிரிங் சீட்டுகளை' குற்றப்பல்வகை மனு எண்.323/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அச்சொத்தின் உரிமையாளரான |

| | |
|---|---|
| | அ.சா.1யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் உள்ள வழக்கு சொத்து எண். 47/2015 ல் உள்ள KA 51 C 1109 என்ற பதிவெண் கொண்ட Eicher Lorryயை குற்றப்பல்வகை மனு எண்.602/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அதன் உரிமையாளர் கிருஷ்ணகுமார் (எ) சின்னத்தம்பி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக 10.03.2026ம் தேதி அன்று வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. கனிமொழி, அவர்கள் ஆஜராகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. D.யமுனா அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு ஆவணங்களை பரிசிலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ;

**<u>தீர்ப்புரை</u>**

**1)** கடந்த 12.01.2015 ம் தேதி விடியற்காலை 02.00 மணிக்கு புக்கசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் புதியதாக கட்டிடம்

கட்டுவதற்கு வைக்கப்பட்டிருந்த சாட்சி 1க்கு சொந்தமான 165 இரும்புசென்டரிங் சீட்டுகளை 1 முதல் 8 எதிரிகள் திருடி 1ம் எதிரிக்கு சொந்தமான KA-51C-1109 என்ற Eicher Lorry ல் ஏற்றிக்கொண்டு காவேரிப்பட்டிணம் இரும்புக்கடையில் விற்பதற்காக வைத்திருந்து எதிரிகள் இ.த.ச.பிரிவு 379 ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக, பேரிகை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிகளுக்கு, இந்நீதிமன்றத்திலிருந்து குவிமுச பிரிவு 204 பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் எதிரிகள் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச 207 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் குவிமுச 251 (1) பிரிவின்படி, எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379 ன் கீழான குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது எதிரிகள் தான் குற்றவாளிகள் இல்லை, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார்கள். எனவே, எதிரிகளுக்கு எதிரான அரசுத் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் வழக்கில்

நிகழ்நிலைப்புகார்தாரர் அ.சா.1 ஆகவும், அ.சா.1 உடன் வேலை செய்த வினோத்குமார் அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகளான குமாரவேல் அ.சா.3 ஆகவும், ரவி அ.சா.5 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான சாமுண்டி அ.சா.4 ஆகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள பேரிகை காவல் நிலைய காவல் ஆய்வாளர் துரைராஜ் அ.சா.6 ஆகவும் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில் புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகவும், பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.4ன் கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகவும், சென்ட்ரிங் சீட்டுகளை கைப்பற்றப்பட்ட படிவம் –91 **அ.சா.ஆ.8** ஆகவும், Eicher Lorryயை கைப்பற்றப்பட்ட படிவம் –91 **அ.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் படிவம் –91 ல் கைப்பற்றப்பட்ட 165 சென்ட்ரிங் சீட்டுகள் **சா.பொ.1** ஆகவும், Eicher Lorry **சா.பொ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, குவிமுச பிரிவு 313 (1) (b) ன் படி வினவியபோது, எதிரிகள் பொய்

சாட்சியம் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். மேலும் எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் யாருமில்லை என்று கூறியதால், எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

7) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 379 – ன் கீழான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதே ஆகும்.

**8) தீர்வு :–**

1) அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கில் அ.சா.1க்கு சொந்தமான 165 சென்ட்ரிங் சீட்டுகளை புக்காசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைப்பெற்ற கட்டிடட

வேலைக்காக அப்பள்ளியின் வளாகத்தில் வைக்கப்பட்டு இருந்ததை எதிரிகள் கடந்த 12.01.2015ம் தேதி திருடி சென்று உள்ளார்கள் என்றும், மேற்படி களவு சம்பவத்தை பொறுத்து அ.சா.1 புகார் அளித்தது குறித்தும் எதிரிகளால் திருடி சென்ற 165 சென்ட்ரிங் சீட்டுகளை போலிசார் மீட்டு நீதிமன்றம் மூலம் தன்னிடம் ஒப்படைத்தது குறித்தும் அ.சா.1 தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், சம்பவத்தை பொறுத்து அ.சா.1 உடன் கட்டிட வேலையில் ஈடுப்பட்டு இருந்த அ.சா.2 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், மேலும் இவ்வழக்கில் திருடப்பட்ட 165 சென்டிரிங் சீட்டுகளை 2ம் எதிரி தானாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தனது முன்னிலையில் கைப்பற்றப்பட்டது குறித்து கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4 சாமுடி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அந்த வகையில் இவ்வழக்கில் திருடப்பட்ட 165 சென்ட்ரிங் சீட்டுகளை எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்று அரசு தரப்பு சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யப்பட்டது என்றும், மேலும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ள அ.சா.6 காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கில் புகார் மனுப்பெற்று வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது குறித்தும் இவ்வழக்கின் எதிரிகளை கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய குற்ற எண். 937/2014வழக்கில் கைது செய்யப்பட்டு அவ்வழக்கில் அ.சா.4 சாமுடி

முன்பு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் திருடப்பட்ட 165 செண்ட்ரிங் சீட்டுகளும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்றும், மேலும் திருடப்பட்ட செண்ட்ரிங் சீட்டுகளை எடுத்து செல்ல பயன்படுத்தப்பட்ட ஈச்சர் லாரியை கைப்பற்றியது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோரின் வாய்மொழி சாட்சியங்களை அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருள் 1 மற்றும் 2ம் உறுதி செய்கிறது என்றும், அந்த வகையில் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவு 379 கீழான குற்றச்சாட்டையை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையால் எதிரிகளை இ.த.ச பிரிவு 379 ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கி தீர்ப்பளிக்க வேண்டும் என வாதிட்டார்.

2) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் இவ்வழக்கில் எதிரிகள் புக்காசாகரம் அரசு மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் வைக்கப்பட்டு இருந்த அ.சா.1க்கு சொந்தமான 165 செண்டிரிங் சீட்டுகளை திருடி சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளபோதிலும், இவ்வழக்கின் புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் எதிரிகளின் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகளாக யாரையும்

விசாரிக்கப்படவில்லை என்றும், அரசு பள்ளி மைதானத்தில் இருந்த செண்டிரிங் சீட்டுகளை எதிரிகள் திருடியதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும், அரசு பள்ளியில் நுழைவு வாயில் கேட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததா அல்லது திறக்கப்பட்டு இருந்ததா என்பதைப் பொறுத்து இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதையும், அதை குறித்து அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ள அ.சா.6 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் 2ம் எதிரி அளித்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் திருடியதாக சொல்லப்படும் 165 செண்டிங் சீட்டுகளையும் அதற்கு பயன்படுத்திய ஈச்சர் லாரியையும் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றியதாக அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், ஒப்புதல் வாக்குமூல சாட்சி மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.4 சாமுடி தனது சாட்சியத்தில் தான் கடந்த 2014ம் ஆண்டு கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் கையெழுத்து செய்ததாகவும் அப்போது 2ம் எதிரி உட்பட ஆஜர் எதிரிகள் யாரையும் பார்க்கவில்லை என்றும் தான் வேலை செய்த மில்ட்ரி மருத்துவமனை கட்டிடடத்திற்கான கம்பிகள் திருடு போன வழக்கிற்கு சாட்சி கையெழுத்து செய்யததாகவும் தான் கையெழுத்து செய்த ஆவணங்கள் குறித்து தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சி அளித்துள்ளார் என்றும், ஆகையால் இவ்வழக்கில் 2ம்

எதிரியால் வழங்கப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் திருடு போன 165 செண்ட்ரிங் சீட்டுகளை கைப்பற்றி மகஜர் தயார் செய்யப்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கு நிருபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து 165 செண்டிரிங் சீட்டுகளை புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டது நிருபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவு 379ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யவில்லை என்றும், ஆகையால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக பாவித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

3) இருத்தரப்பு வாதங்களும் வழக்கு கோப்புகளும் பரிலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கின் படி கடந்த 11.01.2015ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் அ.சா.1 க்கு சொந்தமான 165 செண்டிரிங் இரும்பு சீட்டு மற்றும் பலகை ஆகியவற்றை புக்காசாகரம் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்திருந்ததாகவும் அதனை எதிரிகள் 12.01.2015ம் அதிகாலை 04.00 மணிக்கு திருடி விட்டதாகவும் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவு 379ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அ.சா.1 ஆல் 12.01.2015ம் தேதி புகார் அளிக்கப்பட்டு மேற்படி புகாரின் அடிப்படையில் அன்றைய தினமே 19.30 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக உள்ளது. மேலும், புகார் மனுவில் அ.சா.1 புக்காசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இறக்கிவைத்துவிட்டுச் சென்ற 165 சென்ட்ரிங் சீட்டுகள் காணவில்லையென்றும், யாரோ திருடிச் சென்றுள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் தெரியவில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது புலப்படுகிறது.

5) இந்நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கையின் படி கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய குற்ற எண்.937/2014 குற்ற வழக்கில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மேற்கொண்ட புலன்விசாரணையின்போது கிருஷ்ணகிரி காட்டிநாயனபள்ளி முருகன் கோவில் சந்திப்பில் வாகன தணிக்கையில் இருந்தபோது அவ்வழியாக வந்த KA 05 1109 என்ற Eicher வண்டியை வேகமாக ஓட்டிவந்தவர்களை நிறுத்தியபோது அவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் வேகமாக சென்றவர்களை பின்தொடர்ந்து சென்றபோது கிருஷ்ணகிரி டவுனுக்குள் R.S.லட்சுமிபுரத்தில் சந்தேகத்தின் பேரில் நின்றுகொண்டிருந்த இவ்வழக்கின் 2 முதல் 8 எதிரிகளை விசாரித்ததில் 2ம் எதிரி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 முதல் 8 எதிரிகள் இவ்வழக்கில் திருடப்பட்டதாகச் சொல்லப்படும் 165 சென்ட்ரிங்

சீட்டுகளை திருடி Eicher Lorryயில் எடுத்து வந்ததாக ஒப்புக்கொண்டதாக 2 முதல் 8 வரையிலான எதிரிகளை கைது செய்யப்பட்டதாகவும், 1ம் எதிரி முன் பிணை பெற்றுச் சென்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சிவலிங்கம் தனது சாட்சியத்தில், தனக்கு சொந்தமான 165 சென்டிரிங் சீட்டுகளை புக்காசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அடுத்த நாள் காலை வந்து பார்த்த போது சென்டிரிங் சீட்டுகள் காணாமல் போய்விட்டதாகவும் அது சம்பந்தமாக தான் புகார் அளித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1உடன் கட்டிட வேலை பார்த்து வந்ததாகச் சொல்லப்படும் அ.சா.2 வினோத்குமார் தனது சாட்சியத்தில், தான் 2015ம் ஆண்டு புக்காசாகரம் பள்ளிகூட கட்டிட வேலை செய்துக்கொண்டு இருந்ததாகவும், தன்னுடன் புகார்தாரரும் வேலை செய்ததாகவும், புகார்தாரர் சிவலிங்கத்திற்கு சொந்தமான சென்டிரிங் சீட்டு திருடு போய்விட்டதாக சிவலிங்கம் சொல்லி தான் தெரிந்துக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகளான குமரவேல் மற்றும் ரவி ஆகியோர் அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆக சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்கள் தங்களுடைய சாட்சியத்தில் புக்காசாகரம் அரசு பள்ளியில் திருடு போன இடத்தில் போலிசார் சம்பவ இடத்ததை

பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்று அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்கள். இருப்பினும் அ.சா.1 மற்றும் 2 ஆகியோரின் சாட்சிகள் மூலம் அவர்கள் இருவரும் சென்டிரிங் சீட்டுகளை யார் திருடினார் என்பதை பொறுத்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பது புலப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் எந்த ஒரு சாட்சியையும் விசாரிக்கவில்லை.

8) இந்நிலையில் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய குற்ற எண் 937/2014 வழக்கில் சம்பந்தமாக அவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி 2 முதல் 8 எதிரிகளை கைது செய்யதாகவும் அப்போது 2ம் எதிரி வேலு தானாக முன்வந்து யாருடைய துண்டுதலும் அச்சுறுத்தலும் இன்று சாட்சி சாமுடி மற்றும் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கில் திருடப்பட்ட 165 செண்டிரிங் சீட்டுகளை எதிரிகள் திருடியதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும் அதனடிப்படையில் மேற்படி 165 செண்டிரிங் சீட்டுகளையும் திருடப்பட்ட சென்டிரிங் சீட்டுகளை எடுத்து செல்ல பயன்படுத்தப்பட்ட ஈச்சர் லாரியையும் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் கைப்பற்றி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சாவித்ரி என்பவருக்கு தகவல் அளித்து நீதிமன்ற அனுமதி உடன் எதிரிகளை கைது செய்து புலன் விசாரணை மேற்கொண்டு 165 செணட்டிரிங் சீட்டுகளை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்தாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட போதிலும், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்

கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.4 சாமுடி என்பவர் தான் 2014ம் ஆண்டு கிருஷ்ணகிரி கட்டிநாயனப்பள்ளியில் உள்ள மிலிட்ரி மருத்துவமனையில் பணிப்புரிந்ததாகவும், அப்போது கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்யததாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் யாரையும் தான் காவல் நிலையத்தில் பார்க்கவில்லை என்றும், தான் வேலை செய்த மிலிட்ரி மருத்துவமனை கட்டிடடத்திற்கான கம்பிகள் திருடுபோன வழக்கிற்கு சாட்சியாக கையெழுத்து செய்யததாகவும், தான் கையொப்பம் செய்த ஆவணங்கள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4யை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள போதிலும், அவரிடம் இருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மாறாக, அ.சா.4 தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது ஒப்புதல் வாக்குமூலத்திலும் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலும் தான் சாட்சியாக இருந்தார் என்று அரசு தரப்பு வழக்கை முற்றிலும் மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் நிருபணம் செய்யபடவில்லை என்றே நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால் இவ்வழக்கில் களவு போனதாக சொல்லப்படும் 165 செண்டிரிங் சீட்டுகளை எதிரிகளிடம் இருந்து கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் அரசு தரப்பு வழக்கு நிருபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள அ.சா.6 பேரிகை காவல் நிலைய ஆய்வாளர் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளபோதும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.4 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கில் திருடப்பட்டதாகச் சொல்லப்படும் சென்ட்ரிங் சீட்டுகளை எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்படாததாலும், ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளித்துள்ள அ.சா.6ன் சாட்சியத்தின்அடிப்படையில் எதிரிகளின் மீதான இதச 379ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் 165 சென்ட்ரிங் சீட்டுகளை எதிரிகள் தான் திருடினார்கள் என்பதையும், எதிரிகளிடமிருந்து மேற்படி 165 சென்ட்ரிங் சீட்டுகளும் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் கைப்பற்றப்பட்டது என்பதையும் அரசு தரப்பில் சட்டப்படி நிரூபணம் செய்யப்படவில்லையென்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்களை நன்கு ஆராய்கையில் இவ்வழக்கில் எதிரிகள் மீதான இதச பிரிபு 379ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக பாவித்து எதிரிகள் இ.த.ச.பிரிவு 379ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து இவ்வாறே இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10) முடிவில் திரண்ட பயனிலிருந்தும் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரிகளை குவிமுச பிரிவு 248 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது.

மேலும் இவ்வழக்கில் உள்ள வழக்கு சொத்து எண். 13/2015 ல் உள்ள '165 எண்ணிக்கைகள் கொண்ட சென்டிரிங் சீட்டுகளை' குற்றப்பல்வகை மனு எண்.323/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அச்சொத்தின் உரிமையாளரான அ.சா.1யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வழக்கில் உள்ள வழக்கு சொத்து எண். 47/2015 ல் உள்ள KA 51 C 1109 என்ற பதிவெண் கொண்ட Eicher Lorryயை குற்றப்பல்வகை மனு எண்.602/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி

அதன் உரிமையாளர் கிருஷ்ணகுமார் (எ) சின்னத்தம்பி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.03.25 11:35:09 +0530

**குறிப்பு**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3). இந்த வழக்கில் வழக்கு சொத்து குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பின் அட்டவணை**

**1. குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| **வ. எண்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வரிசை** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | திரு. சிவலிங்கம் | அ.சா.1 |
| 2. | திரு. வினோத்குமார் | அ.சா.2 |
| 3. | திரு. குமாரவேல் | அ.சா. 3 |
| 4. | திரு. சாமுண்டி | அ.சா. 4 |
| 5. | திரு. ரவி | அ.சா. 5 |
| 6. | திரு. துரைராஜ், புலன் விசாரணை அதிகாரி | அ.சா.6 |

**2). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**

| வ. எண் | ஆவண விவரம் | சான்றாவண வரிசை |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜர் | அ.சா.ஆ.2 |
| 3. | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் முதல் கையெழுத்து | அ.சா.ஆ.3 |
| 4. | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.4ன் முதல் கையெழுத்து | அ.சா.ஆ.4 |
| 5. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.5 |
| 6. | மாதிரி வரைபடம் | அ.சா.ஆ.6 |
| 7. | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.ஆ.7 |
| 8. | 165 சென்ட்ரிங் சீட்டுகள் கைப்பற்றப்பட்ட படிவம் –91 | அ.சா.ஆ.8 |
| 9. | Eicher Lorry கைப்பற்றப்பட்ட படிவம் 91 | அ.சா.ஆ.9 |

**3). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்று பொருட்கள் பட்டியல்**

| **வ.எண்** | **சான்று பொருள் விவரம்** | **சான்று பொருள் வரிசை** |
|---|---|---|
| 1. | Eicher Lorry – KA–51–C–1109 | சா.பொ.1 |
| 2. | 165 எண்ணிக்கைகள் கொண்ட சென்டிரிங் சீட்டுகள் | சா.பொ.2 |

**4). எதிரிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| **வ.எண்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வரிசை** |
|---|---|---|
| – | – | – |

**5). எதிரிகள் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**

| **வ.எண்** | **தேதி** | **ஆவண விவரம்** | **சான்றாவண வரிசை** | **தன்மை** |
|---|---|---|---|---|
| – | – | – | – | – |

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.03.25 11:35:14 +0530

**நகல்:** மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.